

18.11.2026 செய்திகள்

கடற்பயண சுதந்திரத்தை வலியுறுத்தி கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் கூட்டு பிரகடனம்

- கடல்சார் வளங்களை பாதுகாப்பதில் ஒத்துழைப்பு நிலவ வேண்டும். கடல் மாசு, கடல் கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும். நீர்மூழ்கி கேபிள்கள், குழாய் வழிப்பாதை மற்றும் நீருக்கடியில் உள்ள முக்கிய கட்டமைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- பிரச்சனைகளுக்கு சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டு அமைதி தீர்வு காண வேண்டும்.
- கடல்களை சர்வதேச சட்டத்துக்கு ஏற்ப பயன்படுத்தும் சுதந்திரம் வேண்டும். கடலில் சுதந்திரமாக பயணம் செய்யும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- டிஜிட்டல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, அறிவியல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் பிராந்திய ஒத்துழைப்பு நிலவ வேண்டும்.
- ஆன்லைன் மோசடிகளை தடுக்க பாதுகாப்பான டிஜிட்டல் சூழல் நிலவ வேண்டும்.

ஆசியான் நாடுகளுக்கு இலவச இ-விசா

- ஆசியான் கூட்டமைப்பு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் சுற்றுலா பயணியருக்கு கட்டணமின்றி இலவச மின்னணு விசா வழங்கப்படும்.
- கடல்வழி இணைப்பு, அறிவியல் ஆராய்ச்சி, பேரிடர் மேலாண்மை, கடலோர காவல்படை ஒத்துழைப்பு, கடல்சார் விழிப்புணர்வு, மாலுமிகளின் பாதுகாப்பை மேம்படுத்த நடவடிக்கை
- ஆசியான் நாடுகளுடன் அணுசக்தி தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் பயிற்சி திட்டங்களில் கூட்டு செயல்பாடு, கிரிப்டோ கரன்சியில் ஒத்துழைப்பு
- அதிநவீன தொழில்நுட்பங்களுக்கு அடிப்படை தேவையான முக்கிய தாதுக்கள் மற்றும் கனிமங்கள் துறையில் ஒத்துழைப்பு
- பிராந்தியத்தில் சைபர் பாதுகாப்பு திறன் மேம்பாட்டிற்காக கூட்டு சைபர் தடயவியல் பயிற்சி
- இந்தியா – ஆசியான் விண்வெளி தொழில்நுட்பத்தில் இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் விவசாயம், வள மேலாண்மையில் அவற்றை பயன்படுத்தும் சிறப்பு திட்டங்கள்
- நாளந்தா பல்கலையில் ஆசியான் நாடுகளுக்கான கல்வி உதவித்தொகையை அதிகரித்தல்.

ஜார்கண்ட் சுரங்கம்

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் சத்ரா மாவட்டத்தின் அடர்வனப் பகுதியில் 928 ஹெக்டேர் பரப்பில் நிலக்கரி சுரங்கம் அமைக்க மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாறுதல் துறை அமைச்சகம் அனுமதித்துள்ளது.

- இங்கு ஏற்கெனவே உள்ள நிலக்கரி சுரங்கத்தின் விரிவாக்கம்தான் இந்தத் திட்டம். இதற்கு மாநில அரசு ஒப்புதல் தேவை. மாநில அரசு நிச்சயமாக ஒப்புதல் வழங்கும்.
- ஏனெனில், உச்சநீதிமன்றம் அண்மையில் அளித்த தீர்ப்பின்படி, ஒரு மாநிலத்தின் கனிமப் பொருள்களை வெட்டியெடுக்கும்போது, அந்தக் கனிமப் பொருள்களின் விலைமதிப்பில் ஒரு தொகையைப் பெற மாநிலத்துக்கு உரிமை உள்ளது.
- அதனால், மாநில அரசு பல ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை இழக்க விரும்பாது. அந்தப் பணத்தில் புதிய திட்டங்கள் அறிவிக்கலாம். மக்கள் நல்வாழ்வு என்கிற பெயரில் இலவசங்களை அள்ளி வழங்கலாம்.
- இந்தத் திட்டம் அமலாகும் என்றால், இந்த அடர்வனத்தின் 5.6 லட்சம் மரங்களை வெட்டி அகற்ற வேண்டியிருக்கும். இவற்றில் சுமார் 2.40 லட்சம் மரங்கள் சால் (குங்கிலிய) மரங்கள். இது திறந்தவெளிச் சுரங்கம் என்பதால், இந்த மரங்களை வெட்டி அகற்றாமல் சுரங்கம் தோண்ட முடியாது.
- இந்த அடர்வனப் பகுதியில் ஏற்கெனவே யானைகள்–மனிதர்கள் மோதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளில் சுமார் 1,340 பேர் யானைகள் தாக்கி உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டில் மட்டும், இதுவரை 20 பேர் பலியாகியுள்ளதாக மாநில வனத்துறை கூறுகிறது.
- இந்தப் பகுதியில் யானைப் பாதைகள் மறிக்கப்பட்டதாலும், அதன் வாழ்விடம் சுருங்கியதால் உணவு தேடி யானைகள் வெளியிடங்களுக்கு தடம் மாறி வருவதாலும் இந்தச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.
- இப்போது, மேலும் 928 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டால், யானைகள் வாழ்விடம் மேலும் குறுகிவிடும். அவற்றின் தேடல் பரப்பும், மனிதர்களின் மீதான வெளித்தாக்குதலும் மேலும் அதிகரிக்கும்.
- மரங்கள் அழிக்கப்பட்டால் யானைகள் மட்டுமின்றி, அந்தப் பகுதியில் வாழும் அனைத்து உயிரினங்களின் வாழ்விடங்களும் குறுகிவிடும். இங்கு வங்க நரிகள், கழுதைப்புலி, அரியவகை மலைப் பாம்புகள் பல அரிய வகை பறவை இனங்களும் வாழ்விடம் தேடி, பிற இடங்களுக்குச் செல்லும்; மேலும், பல்லுயிர்ப் பெருக்கம் பாதிக்கப்பட்டு, இன அழிப்பு அரங்கேறும்.
- கரியமில வாயு அதிகரிப்பால் பனிப்பாறைகள் உருகும்போது புவிவெப்பம் அதிகரிக்கிறது என்று நாம் கதறுவதைப் போல, அந்தப் பகுதியை சார்ந்துள்ள வடதுருவக் கரடிகளும் கதறுகின்றன.
- ஆனால், அது நம் காதில் விழுவதில்லை. பனிக்கரடிகள் வாழ்விடம் இல்லாமல், இனப்பெருக்கம் குறைந்து, மெல்ல மெல்ல அருகிவரும் உயிரினமாக மாறுகின்றன. 2025–ஆம் ஆண்டில் நடைபெற்ற 'பல்வகை உயிர்களின் பரவல்' என்ற தலைப்பிலான ஆய்வுகளின் முடிவின்படி, 196 வகையான நிலம் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் 91 சதவீதம் தங்கள் வாழ்விடத்துக்கு வெளியே புதிய இடங்களைத் தேடிச் சென்று வாழ்கின்றன என்று தெரிய வந்துள்ளது.
- இவ்வாறு வன உயிரினங்கள் தங்கள் வாழ்விடத்தை இழந்து, புதிய பரப்புக்கு மாறிச் செல்லும் நிலை விலங்குளிடம் 17 கி.மீ. தொலைவு வரை நடைபெறுகிறது; பறவை இனங்களில் இது 11 கி.மீ ஆக உள்ளது.
- 2030–ஆம் ஆண்டு மின் உற்பத்தியில் 50 சதவீத தேவையை நிலக்கரி சாராத மின்திட்டங்களில் இருந்து உற்பத்தி செய்யும் இலக்கை 2025–ஆம் ஆண்டில், அதாவது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே அடைந்து விட்டோம் என்று பெருமை பேசினாலும், அனல்மின் நிலையத் தேவைக்கான நிலக்கரி பயன்பாடு குறையவில்லை; 0.6 சதவீதம் அதிகரித்துள்ளது.
- அனல்மின் நிலையங்களில் நிலக்கரி பயன்பாடு மற்றும் கரியமில வாயு வெளிப்பாட்டில் இந்தியா மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது. சீனா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் உள்ளன.
- அனல்மின் நிலையங்களில் இந்தியா 3.4 பில்லியன் டன் நிலக்கரியைப் பயன்படுத்தி வருகிறது. உலக அளவில் கரியமில வாயு வெளிப்பாட்டில் இந்தியாவின் பங்கு 8.4 சதவீதமாக உள்ளது.
- நிலக்கரி பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்று எல்லாரும் பேசும் சூழ்நிலையில், நிலக்கரி தொழில்நுட்பத்தில் மின்சாரம் தயாரிக்க, நிலக்கரி சுரங்கத்தை புதிதாக தோண்டுவதற்கு அனுமதி அளிக்கப்படவுள்ளது.
- காலநிலை மாநாடுகளில் கலந்து கொள்ளும் இந்தியா, நிலக்கரி சாரா மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒப்புதல் அளித்து வருகின்ற நிலையில், இப்போது நிலக்கரி சுரங்கத்துக்கு அனுமதி அளிப்பது ஏன்?

- மரபுசாரா மின்உற்பத்தி முறைகளுக்கு மாறுவதில் சிரமங்கள் உள்ளன. புதிய அணைகள் கட்டி புனல் மின்சாரம் தயாரிப்பது, சுற்றுச்சூழலைப் பாதிக்காது என்றாலும், சூழலியலைப் பாதிக்கும்.
- அதற்கும் பல ஏக்கர் வனப் பரப்பை அழித்தாக வேண்டும். அதில் வாழும் உயிரினங்கள் அனைத்துமே அழிவின் விளிம்புக்கு நகரும்; பல்லுயிர்ப் பெருக்கம் பாதிக்கக்கூடும்.

துருக்கி காலநிலை உச்சிமாநாடு

- காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை எதிர்கொள்ள உலக நாடுகள் ஓரணியாகக் கைகோத்து, ஐக்கிய நாடுகள் அவையின் ஒருங்கிணைப்புடன் ஆண்டுதோறும் பன்னாட்டுக் காலநிலை உச்சிமாநாடுகளை நடத்தி வருகின்றன.
- தற்போது 31ஆவது மாநாடு (COP 31) துருக்கி நாட்டின் ஆன்டாலியா நகரில் நவம்பர் 9 முதல் 20 வரை நடைபெற்று வருகிறது. பொதுவாக, இந்த மாநாடுகளில், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் நாடுகளின் பொறுப்பு, நிதிப் பங்களிப்பு, கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட விஷயங்கள் விவாதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

» காலநிலை மாற்றம் என்பது...

- காலநிலை மாற்றம் என்பது பூமியின் சராசரி வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக, ஒட்டுமொத்தப் பூமியின் காலநிலை அமைப்பில் ஏற்படும் நிரந்தர மாற்றங்களைக் குறிக்கிறது.
- இந்த மாற்றங்கள் ஏற்படுத்தும் இயற்கைச் சீற்றங்கள் பேரழிவுக்கு வழிவகுத்துவிடுகின்றன. குறிப்பாக நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகிய புதைபடிவ எரிபொருள்களை எரிப்பதால் கார்பன்டை ஆக்சைடு (CO_2), மீத்தேன் போன்ற பசுங்குடில் வாயுக்கள் வளிமண்டலத்தில் அதிகமாக வெளியாகின்றன.
- இந்த வாயுக்கள் சூரிய வெப்பத்தை விண்வெளிக்குத் திரும்ப விடாமல் பூமியிலேயே தடுத்து நிறுத்துவதால், புவி வெப்பமாதலுக்கு முதன்மைக் காரணமாக ஆகின்றன.
- தவிர காடுகளை அழித்தல், நவீன விவசாய முறைகள், தொழிற்சாலைச் செயல்பாடுகள், வாகனங்கள் வெளியிடும் புகை போன்றவை கார்பனை உறிஞ்சும் இயற்கை அமைப்புகளைக் குறைத்து வெப்பநிலையை அதிகரிக்கின்றன.
- இதன் விளைவாகத் துருவப் பகுதிகள், மலைகளில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகுவதால் கடல் நீர்மட்டம் உயர்கிறது.
- இதனால் தாழ்வான பகுதிகளைக் கடல் விழுங்கிவிடுகிறது. தவிர, கடல்நீர் அமிலத்தன்மையை அடைவதுடன், தாவரங்கள் – விலங்குகளின் வாழிடங்கள் மாறி உயிர்ப்பன்மை பாதிக்கப்படும் சுற்றுச்சூழல் பிரச்சினையாக உருவெடுக்கிறது.
- காலநிலை மாற்றம் காரணமாகக் கடுமையான வெப்ப அலைகள், எதிர்பாராத பெருவெள்ளம், நீண்டகால வறட்சி, வலுவான புயல்கள் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

» எப்போது, எப்படித் தொடங்கியது?

- ஒவ்வொரு நாட்டின் தொழிற்சாலைகள், வாகனப் பெருக்கம், மின்உற்பத்தி நிலையங்கள் வெளியிடும் பசுங்குடில் வாயுக்களின் அளவைக் கருத்தில் கொண்டு, அவற்றைக் கட்டுப்படுத்த 1992 இல் பிரேசில் நாட்டின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற புவி உச்சிமாநாட்டில் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றக் கட்டமைப்பு உடன்படிக்கை உருவாக்கப்பட்டது.
- இதன் அடிப்படையில் 1995 முதல் ஆண்டுதோறும் உறுப்பு நாடுகளில் மாநாடு நடத்தப்படுகிறது. இதுவே 'காப்' என்று அழைக்கப்படுகிறது.
- 2015 இல் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற மாநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க பாரிஸ் ஒப்பந்தம் உருவானது. இதன்படி, தொழிற்புரட்சிக்கு முந்தைய காலக்கட்டத்துடன் ஒப்பிட்டு, உலகின் சராசரி வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியஸ்க்கு கீழாகக் கட்டுப்படுத்தி, 1.5 டிகிரி செல்சியஸ்க்குள் பராமரிக்கும் இலக்கை நோக்கி நகர்வதற்கு உலக நாடுகள் ஒப்புக்கொண்டன.

- ஒவ்வொரு நாடும் தனது கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான தேசியத் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் இந்த மாநாட்டில் முக்கியமான தீர்மானமாக இருந்தது.

» காலநிலை நிதி

- காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கும் அதன் பாதிப்புகளிலிருந்து மக்களையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதற்கும் தேவைப்படும் நிதியை காலநிலை நிதி எனப்படுகிறது.
- எடுத்துக்காட்டாக, நிலக்கரி சார்ந்த மின் உற்பத்தியைக் குறைத்து, சூரிய ஒளி, காற்றாலை ஆகிய மரபுசாரா மின்உற்பத்தியை அதிகரிப்பது, வெள்ளம், வறட்சியை எதிர்கொள்ளும் கட்டமைப்புகளை உருவாக்குவது, கடலோரப் பகுதிகளைப் பாதுகாப்பது, காலநிலைக்கு ஏற்ற வேளாண் முறைகளை மேம்படுத்துவது ஆகியவற்றுக்குப் பெரும் முதலீடு தேவைப்படுகிறது.
- குறிப்பாக, தொழில்மயமாக்கலால் அதிக அளவில் பசுங்குடில் வாயுக்களை வெளியிட்ட வளர்ந்த நாடுகள், காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் வளரும் நாடுகளுக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்பதே இந்தக் கருத்தின் அடிப்படை.
- இவ்வாறு உருவாக்கப்பட்ட காலநிலை நிதியை மானியமாகவோ, குறைந்த வட்டிக்குக் கடனாகவோ, தொழில்நுட்ப உதவியாகவோ கொடுக்கலாம். யார் எவ்வளவு நிதி வழங்க வேண்டும்,
- அது எவ்வாறு வழங்கப்பட வேண்டும், உண்மையில் இவ்வாறு வழங்கப்படும் நிதியும் அதன் பலன்களும் பாதிக்கப்பட்ட நாடுகளை முறையாகச் சென்றடைந்து, அதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அளவிடப்பட்டிருக்கின்றனவா என்பது உள்ளிட்ட பல தலைப்புகள் இந்த மாநாடுகளில் முக்கிய விவாதங்களாகப் பேசப்படுகின்றன. மாநாட்டின் புதிய தீர்மானங்கள் 'காப்' நாடுகளுக்கு வலியுறுத்தப்படுகின்றன.

» பாகு மாநாட்டின் முக்கியத்துவம்

- 2024 இல் அஸர்பைஜானின் பாகு நகரில் நடைபெற்ற சர்வதேசக் காலநிலை உச்சிமாநாடு (COP 29), காலநிலை நிதி தொடர்பான புதிய இலக்கை நிர்ணயித்தது.
- அதன்படி வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளுக்கு வழங்கும் காலநிலை நிதியை ஆண்டுக்கு 100 பில்லியன் டாலரிலிருந்து 2035 ஆம் ஆண்டுக்குள் 300 பில்லியன் டாலராக உயர்த்த ஒப்புக் கொண்டன.
- மேலும், அரசு-தனியார் முதலீடுகள் உள்ளிட்ட அனைத்து வழிகளையும் பயன்படுத்தி ஆண்டுக்கு 1.3 லட்சம் கோடி டாலர் நிதியைத் திரட்டுவதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

» தற்போதைய நிலை

- தற்போது துருக்கியில் நடைபெற்றுவரும் மாநாட்டில் (COP 31), ஏற்கெனவே அளிக்கப்பட்ட வாக்குறுதி களை நடைமுறைப்படுத்துவது, நிதி வழங்குவதற்கான வழிமுறைகளை உறுதிப்படுத்துவது ஆகியவை பற்றி விவாதிக்கப்படுகின்றன.
- குறிப்பாக, வளரும் நாடுகளுக்கு நிதி எளிதாகச் சென்றடைவது, கார்பன் கடன்களில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவது போன்ற அம்சங்கள் கவனம் பெற்றுள்ளன.
- காலநிலை மாற்றத்தின் விளைவுகள் வளரும் நாடு, வறிய நாடு, முன்னேறிய முதலாம் உலக நாடு என்கிற எந்த வேறுபாடும் இல்லாமல் உலகம் முழுவதையும் பாதிக்கின்றன.
- ஆனால், அவற்றை எதிர்கொள்ளும் பொருளாதார வலிமை எல்லா நாடுகளுக்கும் சமமாக இருப்பதில்லை. எனவே, காலநிலை பாதுகாப்பு என்பது சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கை மட்டுமல்ல ; அது உலகளாவிய சமத்தும், பொருளாதார நீதி, எதிர்காலத் தலைமுறைகளின் வாழ்வுரிமை ஆகியவற்றோடும் தொடர்புடையது.
- நாடுகளின் வாக்குறுதிகள் செயல்பாடுகளாக மாறும்போதுதான் இத்தகைய மாநாடுகளின் உண்மையான வெற்றி உறுதியாகும்.